**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.**
**அ.வ.எண்.44/2023**

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் 1-ம் வாதி உமல் பஜ்ரியா ஆகிய என்னால் 1969 ம் ஆண்டின் 44 வது சட்டவிதி ஏற்பாட்டின்படி திரு. S. தினேஷ்குமார், B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | PW 1 | உமல் பஜ்ரியா | தாலுக்கா: | |
| கணவர பெயர்: | | ஹாஜா நஜீமுதீன் | சமயம்: | |
| கிராமம்: | | | வயது : | 57/2024 |
| தொழில்: | | | | |

Solemnly affirmed in accordance with the provisiions of Act X of 1873 of the day of 23.04.2024

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 1-ம் வாதியாவேன். நான் வேதாரண்யம் தாலுக்கா, தோப்புத்துறை கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணையுறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதை நான் படித்துப்பார்த்தேன். அதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள 10 ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் 10 வரை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நான் 3-ம் பிரதிவாதியின் கடவுச்சீட்டு நகல் மற்றும் 4-ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை, குடும்ப அட்டை நகல்களை தாக்கல் செய்துள்ளேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>3,4-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காலம் சென்ற அப்துல் ஹமீது அவர்களின் மகன்கள் தான் 3,4-ம் பிரதிவாதிகள் என்றால் சரி. நான் வழக்கு தாக்கல் செய்யும்போது 3,4-ம் பிரதிவாதிகள் வெளிநாட்டில் இருந்ததால் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்த பின்னர் 3,4-ம் பிரதிவாதிகள் இந்தியா வந்து வழக்கறிஞர்களை நியமித்து வழக்கு நடத்தி வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். 3,4-ம்

பிரதிவாதிகளையும் சேர்த்து வாரிசு சான்றிதழ் கொடுக்க ஆட்சேபேனை எதுவும் இல்லை.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

Typed down to my dictation, is my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.

DM-cum-JM,
Vedaranyam.